# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார் (திருத்தச்) சட்டம்

---

*[1991 மாச்சு மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1991, மாச்சு மாதம் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : ரூபா 1.00

1991 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார் (திருத்தச்) சட்டம்

[1991, மாச்சு மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 59/89

இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

பாயிரம்

இதுவரை சிலாபம் றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரின் சமயஞ்சார் நியாயாதிக்கத்துக்குட்பட்டதாகவிருந்துவந்த இடப்பரப்பின் ஒரு பகுதி தற்போது குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராசனம் என அழைக்கப்படும் புதிய மேற்றிராசனம் ஒன்றாக உருவாக்கப்பட்டிருக்கின்றதாதலாலும், அதனை நிர்வகிப்பதற்கு அதிவணக்கத்திற்குரிய டாக்டர் ரேமண்ட் பீரிஸ் அவர்கள் குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாராக உரியமுறையில் நியமிக்கப்பட்டிருக்கின்றாராதலாலும் :

குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரைக் கூட்டிணைப்பதற்கு, இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார் கட்டளைச்சட்டத்தையும், வேறு வகையாகவும் திருத்துவது உசிதமானதென்பதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

338 ஆம் அத்தியாயத்தில் பாயிரத்தைத் திருத்துதல்.

2. இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார் கட்டளைச்சட்டத்தின், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும்) பாயிரமானது "உசிதமான" என்னும் சொல்லுக்குப் பதிலாக "உரித்துமாற்றும் நோக்கங்களுக்கு மட்டும் உசிதமான" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 3இ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. மூன்று ஆ ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அப்புதிய பிரிவு முதன்மைச் சட்டவாக்கத்தின் 3இ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும்:—

"குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரைக் கூட்டிணைத்தல்.

3இ. குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியார், அதாவது அதி வணக்கத்துக்குரிய டாக்டர் ரேமண்ட் பீரிஸ் அவர்களும் றோமன் கத்தோலிக்க திருச்சபையின் சட்டங்களுக்கும் வழக்காறுகளுக்கும் இணங்க உரியமுறையில் நியமிக்கப்பட்ட அவரது வழியுரிமையாளர்களும் கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இக்கட்டளைச் சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும், குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியார் என்னும் பெயரைக் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அத்த

கைய பெயர்கொண்டு இடையறுவழியுரிமை கொண்டதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு விவரணத்தினதுமான அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், கொள்வனவு செய்யவும், பெறவும், வைத்திருக்கவும், துய்க்கவும், அத்துடன் அவற்றை விற்பனை செய்யவும் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவும், முழுத்தத்துவம் கொண்டதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனம் தொடர்பில் எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5இ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 5 இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாருக்கு ஆதனம் உரித்தாக்கப்படுதல்.

5இ. சொல்லப்பட்ட அதிவணக்கத்துக்குரிய டாக்டர் ரேமன்ட் பீரிஸ் அவர்களினால், அவரது அலுவலக பூர்வ தன்மையில், ஏலவே கொள்ளப்பட்ட, வைத்திருக்கப்பட்ட, உடைமைகொள்ளப்பட்ட எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனமும், அது சம்பந்தமான ஏதேனும் நம்பிக்கைப்பொறுப்புக்கு அல்லது நிபந்தனைக்கு அமைவாக, சொல்லப்பட்ட குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாருக்கு உரித்தாக்கப்படுவதாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலம், இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"(4) புதிய குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராசனம் உருவாக்கப்பட்டமை காரணமாக, குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரின், நிருவாகத்திற்குட்பட்டதாக வருவதான எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் சம்பந்தமாகவும் குருநாகலை றோமன் கத்தோலிக்க மேற்றிராணியாரின் பெயரில் சிலாபம் மேற்றிராணியாரால் எழுதி நிறைவேற்றப்பட்ட உரித்துமாற்றல், கைமாற்றல் அல்லது சாட்டுதல் சாதனம் எதுவும், 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ், அத்தகைய சாதனத்திற்கு விதித்துரைக்கப்பட்ட முத்திரைத் தீர்வை விதிக்கப்படுவதாதல் வேண்டும்.".

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.